# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 25.07.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

இன்று இன்ஷா அல்லாஹ் மாலை துவக்கவுரையுடன் U.K. ஜல்ஸா ஸலானா ஆரம்பமாகிறது. இந்த வருடம் கிலாஃபத் தோன்றி நூறு ஆண்டுகள் நிறைவடைவதை யொட்டி இறைவனது அருள்களுக்கும் அவனது கருணைக்கும் அவன் நம்மீது பொழிந்துள்ள அருள்களின் மழைக்கும் நன்றி கூறுவதற்காகவும் நாம் இங்கு ஒன்றுகூடியிருப்பதன் காரணத்தால் இந்த மாநாடு மிகவும் சிறப்பிற்குரிய மாநாடாக இருக்கின்றது. முதியவர்கள், இளைஞர்கள், ஆண்கள், பெண்கள் ஆகிய ஒவ்வொரு அஹ்மதியின் உள்ளத்திலும் இந்த மாநாட்டிற்கு ஒரு சிறப்பான இடமிருக்கின்றது. இந்த சிறப்பின் காரணமாக இந்த வருடம் U.K. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமைப்பானது நாட்டிற்குள்ளிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் அதிகமான விருந்தினர்கள் வருவதையொட்டி தனது விரிவான ஏற்பாட்டை செய்வதற்கு முயற்சி செய்துள்ளது. தற்காலிகமாக செய்யப்படும் இத்தகு விரிவான ஏற்பாடுகளின் போது சில சாதாரண குறைகள் ஏற்படுவது சகஜம்தான். அதை தவிர பொதுவாக ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக இருக்கும். இன்ஷா அல்லாஹ்.

ஒரு நீண்ட கால அனுபவமானது மாநாட்டில் பணிபுரிகின்ற ஒவ்வொருவரையும் அவர்களது பணிகளில் தேர்ச்சி பெற்றவர்களாக ஆக்கியிருக்கின்றது. இத்துடன் ஒரு அஹ்மதியின் ஈமானின் உணர்வும் இணைந்து விடும்போது பிறகு அப்பணியும் அசாதாரணமான பணியாகி விடும். கிலாஃபத் ஜுப்ளியையொட்டி நான் சென்ற நாடுகளில் எல்லாம் இந்த உணர்வை என்னால் பார்க்க முடிந்தது. அது கானா அல்லது நைஜீரியா போன்ற பழைய ஜமாஅத்துகள் நடத்தும் ஆண்டு மாநாடாக இருந்தாலும் அல்லது பெனினில் உள்ள புதிய ஜமாஅத்தின் ஆண்டு மாநாடாக இருந்தாலும் அல்லது அமெரிக்கா, கனடா போன்ற நாட்டில் நடைபெறும் ஆண்டு மாநாடாக இருந்தாலும் எல்லா இடத்திலும் இந்த உணர்வை என்னால் பார்க்க முடிந்தது. அமெரிக்காவிலுள்ள அஹ்மதிகள் தொடர்பாக சில விஷயங்களை கூற விரும்புகிறேன். அமெரிக்காவில் நடைபெறும் ஆண்டு மாநாட்டில் மற்ற நாடுகளில் காணப்படும் அந்த உணர்வும் பொலிவும் இருக்காது என்று ஏனைய நாடுகளில் உள்ள அஹ்மதிகள் ஏன் கருதுகிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. எனக்கு வருகின்ற அதிகமான கடிதங்களில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. அமெரிக்கா தொடர்பாக இருக்கும் பொதுவான எண்ணத்தின் காரணமாக இப்படிப்பட்ட எண்ணங்கள் ஒருவேளை அஹ்மதிகளிடம் ஏற்பட்டிருக்கலாம். ஏனென்றால், அமெரிக்கா ஜமாஅத்திலுள்ள பெரும்பாலான நபர்கள் அங்கேயே பிறந்து வளர்ந்து வந்தவர்களாக உள்ளனர். பொதுமக்கள் அமெரிக்கா தொடர்பாக கொண்டிருக்கும் எண்ணமும் தவறானதாகும். பொதுவாக அங்குள்ள பொதுமக்கள் மிகவும் நல்லவர்கள்தான். அவ்வாறே அங்குள்ள அஹ்மதிகளைப் பொருத்தவரையில் அவர்கள் எந்த வகையிலும் குறைந்த நிலையில் உள்ளவர்கள் அல்லர். இவை எல்லாமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் பைஅத்தில் நுழைந்ததன் அருளாகும். அல்ஹம்துலில்லாஹ். எவ்வாறிருப்பினும், இன்று U.K. ன் ஆண்டு மாநாடு தொடர்பாகவே நான் கூற வேண்டியதிருக்கின்றது.

சட்ட ரீதியான எல்லா விஷயங்களையும் முழுமையாகக் கடைபிடித்து இத்தகைய தற்காலிக விரிவான ஏற்பாடுகளுடன் கூடிய மாநாடு எங்கும் நடப்பதில்லை. கடந்த சில வருடங்களாக நடந்துள்ள மாநாடுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது எண்ணிக்கையின் அடிப்படையில் U.K. ல் நடைபெறும் ஆண்டு மாநாடும், ஜெர்மனியில் நடைபெறும் ஆண்டு மாநாடும் சமமாகவே இருக்கின்றது. ஆனால், இந்த வருடம் கானாவில் மாநாட்டில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை இதை விட மிகவும் அதிகமாக இருக்கின்றது. பாகிஸ்தானைப் பற்றி நான் இங்கு குறிப்பிடவில்லை. காரணம் அங்கு நீதியை நிலைநாட்டி கருத்துச் சுதந்திரத்தை மதிப்பதாக வாதம் செய்கின்ற பெயர் தாங்கி அரசாங்கம் தான் இருக்கின்றது. கடந்த 24 வருடங்களாக அங்கு மாநாடு நடத்துவதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கவில்லை. இந்த அமைதியை விரும்பும் ஜமாஅத்திடம் அவர்களுக்கு என்ன அச்சம் ஏற்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை.

எனவே, மாநாட்டின் இந்த நாட்களில் பாகிஸ்தானின் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு அதிகமாக துஆ செய்யுங்கள். பொதுவாக நாட்டின் நிலைமை சீரடைய துஆ செய்ய வேண்டும். அங்குள்ள ஆட்சியாளர்கள் நாட்டை எந்த திசையில் கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. மேலும் இந்த நாட்டை என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பதும் தெரியவில்லை. கடந்த தேர்தலில் அங்குள்ள மவ்லவி மார்களுக்கு சாதகமான அரசாங்கம் அமையவில்லை. எனவே அவர்கள் தங்களது இயல்புக்கு ஏற்ப முழு நாட்டிலும் இதற்காக பழிவாங்கும் செயலில் ஈடுபட்டுள்ளார்கள். ஒவ்வொரு இடத்திலும் குழப்பத்தை உருவாக்கி நாட்டின் அடித்தளத்தையே சீர்குலைக்க அவர்கள் விரும்புகின்றார்கள். பொதுமக்கள் மவ்லவிகளை எப்படித் தூக்கி எறிந்து விட்டார்கள் என்ற இந்த உண்மை நிலை தெளிவாக வெளிப்பட்ட பிறகும் கூட அரசியல் வாதிகளும் ஆட்சியாளர்களும் இந்த முல்லாக்களுக்கு பயப்படுகின்றார்கள். இவர்களது குழப்பங்களை உருவாக்கும் செயல்களை கடுமையாக ஒடுக்குவதற்குப் பதிலாக அவர்கள் முன்னால் இவர்கள் தலைகுனிந்து நிற்கின்றார்கள். அவர்களது ஆதிக்கத்தின் கீழ் இருப்பது போல் அவர்கள் கூறுவதைக் கேட்டே செயல்படுகின்றார்கள். அல்லாஹ் நமது நாட்டின் மீது கருணை காட்டுவானாக. மேலும் பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கு அஹ்மதிகள் சுதந்திரமாக தங்களது நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் அமைதியாக நிம்மதி பெருமூச்சு விடும் நிலை உருவாகுவதற்கும் தங்களது மாநாடுகளை மிகவும் மகிமையுடனும், பொலிவுடனும் நடத்துவதற்கும் அங்குள்ள கொடுமையான சட்டங்கள் அகற்றப்படுவதற்கும் அல்லாஹ் அங்குள்ள ஆட்சியாளர்களுக்கு அறிவை வழங்குவதற்காகவும் துஆ செய்யுங்கள். இந்த மாநாட்டில் கலந்து கொண்டு இங்கு வந்துள்ள பாகிஸ்தானிய அஹ்மதிகள் பாகிஸ்தானிற்காகவும் அங்குள்ள அஹ்மதிகளுக்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள்.

கடந்த குத்பாவில் நான் மாநாட்டில் பணியாற்றுபவர்களுக்கு அவர்களின் பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டினேன். இது எனது வழிமுறையாகும். இவ்வாறு நான் கூறுவதால் பணியில் இருப்பவர்கள் சரியாக வேலை செய்வதில்லை என்று ஒருபோதும் கருத வேண்டாம். அல்லாஹ்வின் அருளால் மற்ற நாடுகளில் உள்ளவர்களைப் போன்றே இங்குள்ள மாநாட்டுப் பணியாளர்களும் மிகவும் உணர்வோடு வேலை செய்கின்றார்கள். இவ்வளவு விரிவான தற்காலிக ஏற்பாடுகளுடன் நடைபெறும் இந்த மாநாட்டிற்காக முதலிலேயே மிக நீண்ட காலம் தயாரிப்பு பணிகளில் ஈடுபடுவதைப் போல வேறு எந்த மாநாட்டிற்காகவும் நாம் தயாராவதில்லை. ஜெர்மனி ஆண்டு மாநாடு கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையில் U.K. ஆண்டு மாநாட்டிற்கு சமமாக இருந்தாலும் பல வசதிகளும் அவர்களுக்கு மாநாட்டுத் திடலிலேயே அமைந்திருக்கிறது. அவ்வாறான வசதிகள் இங்கு இல்லை.

கடந்த வருடம் அல்லாஹ் இங்குள்ள பணியாளர்களுக்கு நல்ல அனுபவத்தை தந்துள்ளான். மழையின் காரணமாக ஏற்பாடுகளில் சீர்குலைவு ஏற்பட்டது. அப்படிப்பட்ட கடினமான சூழ்நிலையிலும் பணியில் இருந்தவர்கள் அழகிய முறையில் தங்களது duty ஐ செய்தார்கள். ஒவ்வொரு துறைக்கும் தங்களது வட்டத்திற்குள் கஷ்டங்களை எதிர் கொள்ள வேண்டியது வரும். கடந்த வருடம் அவ்வாறு நமது நிலை இருந்தது. இந்த வருடம் வெளிப்படையாகப் பார்க்கும்போது வானிலை அறிக்கையின் அடிப்படையில் climate நன்றாக இருக்கும் என்றே தெரிகிறது. அது நன்றாக இருக்க இறைவன் உதவி செய்வானாக. அதற்காகவும் துஆ செய்து கொண்டிருங்கள். எல்லாமே அல்லாஹ்வின் கைகளில் தான் இருக்கின்றது. அவனது அருள் இல்லாமல் எதுவுமே இல்லை. அவன் விரும்பினால்தான் இந்த வானிலை அறிக்கையும் உண்மையானது என நிரூபிக்கப்படும். மனிதனால் கணிக்க மட்டும்தான் முடியும். அதன் அடிப்படையில் அவன் சீதோஷ்ன நிலை தொடர்பாக முன்னறிவிப்பு செய்கின்றான். கடந்த வருடம் இருந்த climate –ன் மூலம் நமக்கு கிடைத்த பலன் என்னவென்றால், இங்குள்ள காதிம்களுக்க புதிய அனுபவம் கிடைத்து விட்டது. இங்குள்ள குத்தாம் நல்ல சீரான நிலையிலுள்ள தூய்மையான ரோடுகளில் நடந்து பழக்கமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இப்போது சேற்றில் நடப்பதற்கும் அவர்கள் அனுபவம் பெற்று விட்டார்கள். இப்போது ஏதாவதொரு வண்டி சேற்றில் சிக்கிக் கொண்டு அதை வெளியில் எடுக்க வேண்டியது வந்தால் எவ்வித சிரமமும் இல்லாமல் எளிதாக அதை வெளியில் எடுக்க இவர்களால் முடியும்.

மாநாட்டிற்காக பணியில் இருப்பவர்கள் இறைவனின் பேரருளால் மிகுந்த உழைப்புடன் வேலை செய்கின்றார்கள். இனியும் செய்வார்கள். இன்ஷா அல்லாஹ். ஆனால், வருகின்ற விருந்தாளிகளுக்கும்

சில பொறுப்புகள் இருக்கின்றது. அதை நிறைவேற்றுவது உங்கள் கடமையாகும். இந்த மாநாட்டில் நீங்கள் கலந்து கொள்வதன் நோக்கம் முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காக இருக்க வேண்டும். இதில் எல்லாவற்றையும் விட மிக முக்கியமான விஷயம் தொழுகைகளை நிலைநாட்டுவதாகும். மாநாட்டில் அமர்ந்தவாறு மிகவும் ஆர்வத்துடன் சில சொற்பொழிவுகளைக் கேட்டு விட்டு செல்வதால் உங்களது இந்த பயணத்தின் நோக்கம் நிறைவேறி விடாது. மாறாக, இந்த நாட்களில் ஒவ்வொருவரும் தங்களிடம் எத்தகு தூய்மையான மாறுதலை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும் என்றால் இந்த நாட்களில் செய்யப்படும் இறைவணக்கங்களும் தொழுகைகளும் மாநாட்டில் கலந்து கொள்பவர்களது வாழ்வில் ஒரு நிரந்தர அங்கமாக மாறி விட வேண்டும். அந்த தொழுகைகள் அச்சத்துடனும், உருக்கத்துடனும் நிறைவேற்றப்பட வேண்டும். அது மட்டுமல்லாமல் எல்லா தொழுகைகளையும் அதற்குரிய நேரங்களில் தொழுவதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் ஜமாஅத்தாக தொழுவதை கட்டாயமாக்கிக் கொள்ளுங்கள். இங்கு மாநாட்டின் போது தொழுகை நேரங்களில் பொதுவாக பஸார் மூடப்பட்டிருக்கும். மாநாடு நடைபெறும் போதும் அவை மூடப்பட்டிருக்கும். எனவே, அங்கு செல்ல நீங்கள் முயற்சி செய்யக் கூடாது. சில நேரங்களில் காரணமில்லாமல் சிலர் விதிமுறைகளை மீறி செயல்பட முயற்சி செய்யும் போது மாநாட்டின் பணியில் இருப்பவர்களும் கடுமையாக நடந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. பொதுவாக மாநாட்டுத் திடலிலேயே தஹஜ்ஜுத் தொழுகையை ஜமாஅத்தாக தொழுவதற்கு ஏற்பாடு இருக்கும். இங்கு மக்கள் வரவும் செய்கின்றார்கள். ஆனால், மற்ற தங்கும் இடங்களில் தங்குபவர்களும் தஹஜ்ஜுத் தொழுகையை இவ்வாறே நிறைவேற்ற வேண்டும். இஸ்லாமாபாத்திலும் எல்லாரும் ஒன்றாக தங்குவதற்கான தங்குமிடம் இருக்கின்றது. பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலிலும் தங்குவதற்கான ஏற்பாடு இருக்கின்றது. பிறகு மிகப் பெரும் எண்ணிக்கையில் விருந்தினர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளார்கள். அவர்கள் அங்குள்ள centres அருகில் இருந்தால் அவற்றை சென்றடைவது எளிதாக இருந்தால் ஃபஜ்ர் தொழுகைகளையும், மக்ரிப், இஷா ஆகிய தொழுகை நேரத்திற்கு முன்பாக அங்கு சென்று விட்டால் மக்ரிப் இஷா தொழுகைகளையும் ஜமாஅத்தாக நிறைவேற்ற வேண்டும். ஜமாஅத்தாக தொழப்படும் centre களில் அல்லது பள்ளிவாசல்களில் தொழுகைகளை நிறைவேற்ற வேண்டும். இலண்டனில் இருப்பவர்களும் (அதாவது இலண்டனில் வசித்து வருபவர்களும்) இதை கடைபிடிக்க வேண்டும். தங்களது விருந்தினர்களையும் இவ்விஷயத்தை கடைபிடிக்கும்படி கூற வேண்டும். தொழுகைகளின் பக்கமும் இறை வணக்கங்களின் பக்கமும் முழுமையான கவனம் இல்லா விட்டால் இந்த மாநாட்டின் மிகப் பெரும் நோக்கத்தை நிறைவேற்றாதவர்களாக நீங்கள் ஆகி விடுவீர்கள். முழுமையான ஆர்வத்துடனும் தொழுகைக்குரிய உரிமையை நிறைவேற்றியவாறும் தொழுகைகளை நீங்கள் பேணாமல் இருந்தால் எந்த சொற்பொழிவும் உங்களுக்கு எந்த பயனையும் தராது. அவற்றிலுள்ள நுட்பமான அறிவுப்பூர்வமான விஷயங்களும் உங்களுக்கு எந்தப் பயனையும் தராது. இங்கு கிலாஃபத் ஜுப்ளி வருடத்தில் நடைபெறும் முதல் மாநாடாக இருப்பதால் பெரும் எண்ணிக்கையில் மக்கள் இங்கு வந்துள்ளார்கள்.

அல்லாஹ் கிலாஃபத்தின் அருட்கொடையைப் பற்றி குறிப்பிடும் போது கிலாஃபத் மூலம் அல்லாஹ் நம்பிக்கையாளர்களின் அச்சத்தின் நிலைமையை அமைதியில் மாற்றி விடுவான் என்று கூறிய பிறகு அந்த வசனத்தில் அவர்கள் என்னையே வணங்குவார்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

அல்லாஹ்வை வணங்குவதுடன் எவரையும் அவனுக்கு இணையாக்காமல் இருப்பதன் காரணமாக அவர்கள் மீது கிலாஃபத்தின் இந்த அருட்கொடை இருக்கும். கிலாஃபத் மூலம் மார்க்கத்தில் உறுதியாக நிலைநிற்கும் வாய்ப்பும் கிடைக்கும். இந்த விஷயம் அவர்களை மேலும் இறை வணக்கத்தின் பக்கம் கவனமூட்டக் கூடியதாக இருக்கும். இஸ்திக்லாப் வசனத்திற்கும் அடுத்து வரும் வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான். **வஅகீமுஸ்ஸலாத்** – நீங்கள் தொழுகையை நிலைபெறச் செய்யுங்கள். இபாதத்திற்கான அடிப்படை விஷயமும் இறைவனுக்கு இணை வைக்காமல் இருப்பதற்கு நாம் எடுத்து வைக்க வேண்டிய முதல் அடியும் தொழுகைகளை நிலைபெறச் செய்வதே ஆகும். தொழுகையை நிலைபெறச் செய்தல் என்றால் என்ன? தொழுகைகளை ஜமாஅத்தாக தொழுவதும் முழு கவனத்துடன் தொழுகைகளை நிறைவேற்றுவதும் தான் தொழுகைகளை நிலைபெறச் செய்வதாகும். மேலும் தொழுகைகளை அதற்குரிய நேரத்தில நிறைவேற்றுவதும் இதில் அடங்கும்.

தொழுகைகளுக்கு எதிரில் மற்ற எல்லா விஷயங்களையும் நீங்கள் அற்பமாக கருத வேண்டும். அதற்கு எந்த தகுதியையும் நீங்கள் தரக்கூடாது.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் அனைவருமே தங்களது தொழுகைகளின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இந்த நாட்களில் உங்களுக்கு ஏற்படுகின்ற தொழும் பழக்கமானது உங்களது வாழ்வின் ஒரு பகுதியாக ஆவதற்கு நீங்கள் முயற்சிகளைச் செய்வதுடன் அதற்காக துஆவும் செய்யுங்கள். அதன் மூலம் கிலாஃபத்தின் இந்த அருட்கொடையிலிருந்து உங்களுக்கும் பங்கு கிடைக்கும். இந்த அருள் தனிப்பட்ட முறையிலும் ஜமாஅத் அளவிலும் மார்க்கத்தில் நீங்கள் உறுதியாக நிலைநிற்பதற்கு காரணமாக இருக்கும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எதுவரை அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்துவதில் ஒவ்வொரு சமுதாயமும் நிலைநிற்குமோ அதுவரைதான் அந்த சமுதாயமும் எஞ்சியிருக்கும். ஈமானின் வேர் தொழுகையேயாகும்.

அல்லாஹ் உங்களில் நம்பிக்கை கொள்பவர்களிடத்தில் ஒரு வாக்குறுதியை வழங்கியுள்ளான். அவர்களை நிச்சயமாக பூமியில் கலீஃபாக்களாக ஆக்குவான் என்றும் கூறியுள்ளான். இவ்வகையில் ஒவ்வொரு அஹ்மதியும் இந்த அருட்கொடையிலிருந்து பலன் பெறுவதற்கு ஈமானில் முன்னேற முயற்சி செய்ய வேண்டும். ஈமானின் வேர் தொழுகையாகும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த வேரைப் பற்றிப் பிடிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். என்ன நடந்தாலும் இந்த வேருக்கு எந்த இழப்பும் ஏற்படாத வகையில் இதை நமது உள்ளத்தில் நாம் நட வேண்டும். தொழுகைகளில் பலவீனம் காட்டுவதின் பொருள் நமது ஈமானில் பலவீனம் உருவாகி உள்ளது என்பதேயாகும். ஈமானில் பலவீனம் உருவாகும்போது கிலாஃபத்துடன் உள்ள தொடர்பிலும் பலவீனம் ஏற்படும்.

எனவே, ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக இந்த நாட்களில் இங்கு கூடியிருக்கும் நீங்கள் உங்களது தொழுகைகளை பாதுகாத்து வர வேண்டும். அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு ஏற்ப அந்த தொழுகைகள் நம்மை பாதுகாக்கும். அதன் மூலமாக நமது ஈமான் வலுவடையும். நாம் இறைவனின் நெருக்கத்தைப் பெற்றவாறு அவனது அருட்கொடைக்கு எப்போதும் வாரிசாகிக் கொண்டே செல்ல வேண்டும். அல்லாஹ் நம்பிக்கையாளர்களிடம் இதற்கான வாக்குறுதியை வழங்கியுள்ளான்.

தொழுகைகளில் துஆ செய்கின்ற வழிமுறையைப் பற்றியும் அதன் உண்மையைப் பற்றியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள். தொழுகையை மன்றாடுதலுடனும் தாழ்மையுடனும் பணிவுடனும் நிறைவேற்ற வேண்டும். அந்த தொழுகைகளில் மார்க்கத்திற்காகவும் உலகத்திற்காகவும் அதிகமாக துஆ செய்ய வேண்டும். **வல்லதீனஹும் அலா ஸலவாத்திஹிம் யுஹாஃபிலூன்** - அவர்கள் தொழுகைகளை பாதுகாத்துக் கொள்கின்றார்கள். அதில் ஒருபோதும் இடைவெளி ஏற்பட அவர்கள் விடுவதே இல்லை. மனிதன் படைக்கப்பட்டதன் அசல் நோக்கம் அவன் தொழுகையின் உண்மை நிலையை கற்றுக் கொள்ள வேண்டும். தொழுகை மூலமாகத்தான் எல்லா துன்பங்களும் எளிதாகி விடும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இதன் மூலமாகவே எல்லா கஷ்டங்களும் அகன்று விடும். ஆனால் தொழுகை என்பது பொதுவாக மக்கள் சடங்கு என்ற அடிப்படையில் தொழும் அந்த தொழுகை அல்ல. மாறாக மனிதனின் உள்ளம் நெகிழ்ந்து விடும் அந்த தொழுகையே ஆகும். அந்த தொழுகையின் மூலம் ஏக இறைவனின் திருச்சன்னிதானத்தில் வீழ்ந்து மனிதன் எந்த அளவு அதில் திளைத்து விடுகின்றான் என்றால், அவன் உருக ஆரம்பித்து விடுகின்றான். இறைவனுக்கு தேவை இருப்பதால்தான் நாம் தொழுகைகளை பாதுகாக்க வேண்டியதுள்ளது என்று கருதக் கூடாது. இறைவனுக்கு நமது தொழுகைகளின் எந்த தேவையும் இல்லை. அவன் எல்லா உலகங்களிலிருந்தும் தன்னிறைவு பெற்றவனாக இருக்கின்றான். அவனுக்கு யாருடைய தேவையும் இல்லை. ஆனால் மனிதனுக்கு இது தேவை என்பதே இதன் பொருளாகும். இது ஒரு இரகசியமான வி-யமாகும். மனிதன் தானாகவே தனது நன்மையை விரும்புகின்றான். இதனால்தான் அவன் இறைவனிடம் உதவி கேட்கின்றான். மனிதனுக்கு இறைவனுடன் தொடர்பு ஏற்படுவதுதான் உண்மையான நன்மையைப் பெறுவதற்கு காரணமாகும். அப்படிப்பட்டவரை முழு உலகமும் எதிர்த்து நின்றாலும் அவரை அழிப்பதற்கு முயற்சி செய்தாலும் அவரை ஒன்றும் செய்து விட முடியாது. அவருக்கு எந்த சீர்குலைவையும் ஏற்படுத்த

முடியாது. இறைவனுக்கு அப்படிப்பட்ட நபருக்காக இலட்சக்கணக்கான கோடிக்கணக்கான மக்களை அழிக்க வேண்டியது வந்தாலும் அவ்வாறு அழித்து விடுவான். தொழுகை எப்படிப்பட்டதென்றால், இதன் மூலம் உலகமும் சீராகி விடும். மார்க்கமும் சீராகி விடும். தொழுகையைக் கடைபிடிப்பதன் மூலம் மனிதன் எல்லாவித தீமையிலிருந்தும் வெட்கங்கெட்ட செயல்களிலிருந்தும் காப்பாற்றப் படுகின்றான்.

ஆனால், இப்படிப்பட்ட தொழுகைகளை தொழுவது மனிதனின் ஆற்றலில் இல்லை. இந்த வழிமுறையை இறைவனின் உதவி இறைவனிடம் அவனது உதவியை கேட்பது ஆகியவை இல்லாமல் நாம் கடைபிடிக்க முடியாது. மனிதன் துஆக்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்காத வரையில் இப்படிப்பட்ட அச்சமும் உருக்கமும் உருவாக முடியாது. எனவே, **உங்களது இரவும் உங்களது பகலும் எந்த நொடிப்பொழுதும் துஆ இல்லாமல் காலியாக இருக்கக் கூடாது.**

எனவே, மீண்டும் இந்த நாட்களை அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ளான். அல்லாஹ்விடம் உதவியை கேட்டவாறு உங்களது தொழுகைகளை நீங்கள் பாதுகாக்க வேண்டும். எல்லாவிதமான தீய செயலிலிருந்தும் வெட்கங்கெட்ட செயலிலிருந்தும் நம்மை பாதுகாக்கக்கூடிய தொழுகையை அல்லாஹ் நமது பங்கில் வைப்பானாக.

மாநாட்டின் நாட்களில் நீங்கள் ஸலாம் கூறுவதை வழக்கமாக்கி கொள்ளுங்கள். அல்லாஹ் நமக்கு கூறியுள்ள கட்டளைகளில் இதுவும் ஓர் அடிப்படை கட்டளையாகும். இது ஒருவருக்கொருவர் அன்பை வளர்த்து கொள்வதற்குள்ள வழியாகும்.

விருந்தாளிகளுக்கு விருந்தோம்பல் செய்பவர் மீது அதிகமான உரிமை இருந்தாலும் விருந்தாளிகளுக்கும் சில பொறுப்புகள் உள்ளன. சூரா அஹ்ஸாபில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் தொடர்புபடுத்தி ஒரு இறை கட்டளை இருக்கின்றது. அது விருந்தினர்களுக்குரிய அடிப்படை கட்டளையாகும். பொதுவாக விருந்தாளியாக ஒருவர் எங்கு சென்றாலும் அதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஆண்டு மாநாட்டிற்கு வருபவர்கள் குறிப்பாக இதை நினைவில் கொள்ள வேண்டும். ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள வரும் விருந்தாளிகள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக இங்கு வருகின்றார்கள். ஜமாஅத் அமைப்பின் கீழ் தங்கியிருக்கும் விருந்தாளிகள் குறிப்பாக இந்த கட்டளையை பேண வேண்டும்.

இக்கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது விஷயம் அழைக்காத விருந்தாளிகளாக நீங்கள் எந்த இடத்திற்கும் செல்லக் கூடாது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியும் நம் முன்னால் இருக்கின்றது. ஒரு விருந்தில் அழைக்கப்பட்ட விருந்தாளிகளை விட ஒரு நபர் அதிகமாக அவர்களுடன் சேர்ந்து சென்ற சமயத்தில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அதிகப்படியாக வந்த ஒரு நபர் விருந்தில் கலந்து கொள்வதற்கான அனுமதியை விருந்திற்கு அழைத்தவரிடம் கேட்டார்கள். என்னுடன் அதிகமாக ஒரு நபர் வந்து விட்டார் என அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு தகவல் தெரிவித்து அவர் விருந்தில் கலந்து கொள்ள அனுமதி கேட்டார்கள். நீங்கள் விரும்பினால் இவர் என்னுடன் சேர்ந்து வீட்டிற்குள் நுழைவார். விருப்பம் இல்லையென்றால் எவ்வித தயக்கமும் கவலையும் இல்லாமலும் வெட்கப்படாமலும் அதை தெரிவியுங்கள். நான் இவர் திரும்பி சென்று விட வேண்டும் என்று கூறி விடுவேன் என்று ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தாலும் ஜமாஅத்தின் அழைப்புக்கு ஏற்ப நீங்கள் வந்திருந்தாலும் ஜமாஅத் தரப்பில உள்ள விருந்தோம்பல் ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான் இருக்கும். அதற்குப் பிறகும் பிடிவாதமாக சிலர் இங்கேயே தங்குவதற்கு முயற்சி செய்கின்றார்கள். இதுவும் அழைக்காமல் கலந்து கொள்ளும் அதே நிலைதான். பிறகு இதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. சிலர் நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு திரும்பிச் செல்லும் நோக்கத்துடன் டிக்கட் முன்பதிவு செய்கின்றார்கள். அதற்கு பிறகு இப்போது நாங்கள் என்ன செய்வது? நாங்கள் திரும்பிச் செல்ல வழியில்லை என்ற காரணத்தைக் கூறுகின்றர்கள். இந்த இடைப்பட்ட காலத்தில் அவர்கள் இங்கு வேலையும் பார்க்கின்றார்கள். வேறு வழியில்லை என்றால் அவர்கள் சம்பாதிக்கும் பணத்திலிருந்து அவர்கள் செலவு செய்ய வேண்டும். தங்களது செலவுகளை அதன் மூலம் நிறைவு செய்ய வேண்டும். ஜமாஅத்திற்கு சுமையாக இருக்கக்கூடாது. நீண்ட காலம் தங்குவதன் காரணமாக ஏற்பாடுகளில் பல பிரச்சனைகள் ஏற்படும். இதற்கு முன்னரும்

அவ்வாறு ஏற்பட்டுள்ளது. இறுதியில் இடத்தை காலி செய்யும்படி அவர்களிடம் கூற வேண்டியதுள்ளது. பிறகு இப்படிப்பட்டவர்கள் முறையீடுகளை செய்கின்றார்கள். பிறகு சட்டரீதியாகவும் இவர்கள் இங்கு வேலை செய்வதற்கான அனுமதி இல்லை என்பதால் விசிட் விசாவில் இவர்கள் வந்து விட்டு நீண்ட காலம் தங்குவதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஜமாஅத்திற்கும் இதனால் பல பிரச்சனைகள் உருவாகின்றன. அரசாங்கத் துறைகளுக்கு இதுபற்றி தெரிய வரும் போது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. சிலரைப் பற்றிய தகவல் அரசாங்கத் துறைக்கும் தெரிந்து விட்டது. இப்படிப்பட்ட செயல்களைச் செய்பவர்கள் ஒரு சிலர் தான் என்றாலும் அவர்களிடம் நான் கூறிக் கொள்வது நீங்கள் நீண்ட காலம் இங்கு தங்குவதாக இருந்தால் அதற்கான ஏற்பாட்டை நீங்களே செய்து கொள்ளுங்கள். இது தொடர்பாக ஜமாஅத்திடம் எந்த முறையீட்டையும் நீங்கள் செய்யக் கூடாது. மாநாட்டிற்குப் பிறகும் நீண்ட காலம் தங்கியிருப்பது வீட்டிற்கு அழைக்கப்பட்ட விருந்தாளி வீட்டில் விருந்திற்குப் பிறகும் மிக நீண்ட நேரம் அமர்ந்து விருந்தோம்பல் செய்பவருக்கு துக்கத்தைக் கொடுக்கும் அதே நிலைக்கு ஒப்பானதாகும்.

விருந்தினர்களுக்கு தொண்டு செய்வதற்காக பல்வேறு துறைகளைச் சார்ந்த பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். நன்றாக படித்தவர்களும் சாதாரண படிப்பறிவு உள்ளவர்களும் பல்வேறு தொழில்களைச் செய்யக்கூடியவர்களும் இவர்களில் அடங்குவர். இவர்கள் எல்லாருமே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் விருந்தாளிகளுக்கு தொண்டு செய்வதற்காக தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். மிகவும் ஆர்வத்துடன் இந்தப் பணிக்காக தங்களை அவர்கள் அர்ப்பணித்துள்ளார்கள். உள்ளத்தில் மிகுந்த மகிழ்ச்சியுடன் இந்த விருந்தோம்பலை அவர்கள் செய்கின்றார்கள். இதற்காக ஒவ்வொரு பணியையும் செய்ய அவர்கள் தயாராக இருக்கின்றார்கள். மாநாட்டிற்கு முன்பு எல்லா வகையிலும் விருந்தாளிகளை நல்ல முறையில் கவனித்து அவரது தேவையை கருத்தில் கொண்டு செயல்படும்படி நானும் அவர்களுக்கு இரண்டு அல்லது மூன்று முறை கவனமூட்டுகின்றேன். ஆனால், அந்த விருந்தோம்பலில் ஏதாவது சிறிய குறை ஏற்பட்டு விட்டால் விருந்தினர்களும் அதை பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும். இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்ற ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு விருந்தாளியும் தங்களது பொறுப்புகளை உணர்ந்து செயல்பட்டால் சில மனக் கசப்புகள் ஏற்படுவதை நாம் தவிர்க்கலாம்.

கடந்த வருடம் மழையின் காரணமாக நமது ஏற்பாடுகளில் சில சிக்கல்கள் ஏற்பட்டன. அதன் காரணமாக, போக்குவரத்திற்காக நியமிக்கப்பட்டிருந்த பணியாளர்களுக்கும் பயணிகளுக்கும் இடையில் சில சிறிய மனக்கசப்புகள் உருவாயின. இப்போதும் சில விருந்தாளிகளின் முறையீடு இது தொடர்பாக எனக்கு கிடைத்துள்ளது. உதாரணமாக, சாலையோரத்தில் வண்டிகளை நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அரசாங்கத் துறை சார்பாக இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது. மக்கள் போகின்ற வருகின்ற வழிகளில் வண்டிகளை நிறுத்துவதால் நமது அண்டை அயலாருக்கு இதனால் துன்பங்கள் ஏற்படுகின்றன. இது தொடர்பாக MTA –வில் நாம் அறிவிப்பு செய்துள்ளோம். ஜமாஅத்துகளுக்கும் இதுபற்றி மீண்டும் மீண்டும் நினைவூட்டியுள்ளோம். அவ்வாறெல்லாம் இருந்தும் ஐரோப்பாவின் பல பகுதிகளிலிருந்தும் வருபவர்களில் சிலர் தங்கள் வண்டிகளை இவ்வாறு சாலையோரங்களில் நிறுத்தி விட்டு அங்கிருந்து டாக்ஸிகளில் இங்கு வந்து விடுகின்றார்கள். இது தவறான வழிமுறையாகும். விதிமுறைகளுக்கு நீங்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். மாநாட்டின் அருட்களில் இருந்து பலன்பெற வேண்டும் என்றால் இந்த விதிமுறைகளை நீங்கள் பின்பற்றி நடக்க வேண்டும்.

மனக்கசப்புகள் ஏற்படும் போது மாநாட்டுப் பணியாளர்களில் சிலருக்கு மிகுந்த கோபம் வந்து விடுகிறது. அவர்களையும் மனிதன் என்று கருதியவாறு அவர்களது சிறு சிறு தவறுகளையும் கண்டும் காணாமல் நடந்து கொள்வதற்கு கற்றுக் கொள்ளுங்கள். இதனால் மனக்கசப்புகள் வளராது. மேலும் மனக்கசப்புகள் உருவாகவே செய்யாது.

குழந்தைகளுடன் வந்துள்ள தாய்மார்கள், சர்க்கரை வியாதி உள்ளவர்கள், நீண்ட நேரம் பசியுடன் இருப்பதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியாது. ஏதாவது காரணம் இருந்து நிகழ்ச்சிகள் மிக நீண்ட நிகழ்ச்சிகளாக ஆகிவிட்டால் அல்லது டிராஃபிக் நெரிசல் காரணமாக எவருக்காவது அதிக நேரம் பசியுடன் இருக்க வேண்டியது வந்து விட்டால் குழந்தைகள் உள்ளவர்களுக்கும் நோயாளிகளுக்கும் மாநாடு

நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே அவர்களுக்கு உணவு தேவைப்பட்டால் அதற்கான ஏற்பாட்டை செய்யும்படி முதலில் நான் மாநாட்டுப் பணியாளர்களிடம் கூறிக் கொள்கின்றேன். இதில் எந்தத் தவறும் இல்லை. ஏனென்றால், கடைகளும் அந்த சமயத்தில் அடைக்கப்பட்டிருக்கும். இரண்டாவதாக நான் அப்படிப்பட்ட குழந்தைகளுடன் வரும் பெற்றோர்களுக்கும் நோயாளிகளுக்கும் கூறிக் கொள்வது என்னவென்றால், நீங்கள் சாப்பிடுவதற்காக ஏதாவது பொருளை உங்கள் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளுங்கள். இதனால் எல்லா சிரமங்களிலிருந்தும் தப்பித்துக் கொள்ளலாம். டிரான்ஸ்போர்ட்டிற்காக காத்திருப்பதிலும் நேரம் அதிகமாக ஆகி விடலாம். சென்ற வருடங்களை விட இவ்வருடம் இதற்கான ஏற்பாடும் சிறப்பாக செய்யப்பட்டுள்ளது. எந்த சிரமமும் ஏற்படாது என நான் நம்புகின்றேன். இன்-ா அல்லாஹ். அவ்வாறிருந்தும் ஏதாவதொரு வகையில் சிரமங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதை நாம் மறுக்க முடியாது. குறிப்பாக மாநாட்டில் இருந்து நீங்கள் திரும்பிச் செல்லும் போது அதிகமாக கூட்ட நெரிசல் ஏற்படுகின்றது. எனவே இப்படி திடீரென்று ஏற்படும் சிரமங்களை சமாளிக்க ஒரு குழு இருக்க வேண்டும். அவர்கள் இந்த சமயத்தில் விருந்தினர்களுக்கு ஏதாவது சாப்பிடக் கொடுக்க வேண்டும். தாமதத்தால் ஏற்படும் கஷ்டங்களை சகித்தவாறு நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் அழகிய முன்மாதிரியையும் பின்பற்றியவாறு சிரமங்களை பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும் என்பதை விருந்தினர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எத்தகைய விருந்தாளியாக இருந்தார்கள்? இதற்கான ஒரு உதாரணத்யையும் நான் அறிவிப்புகளிலிருந்து எடுத்துள்ளேன்.

ஹஸ்ரத் சேக் யாகூப் அலி சாஹிப் இர்ஃபானி (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்.

ஜங்கே முகத்தஸ் என்ற விவாதம் நடைபெற்ற சமயத்தில் (இந்த விவாதம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் நடந்தது. அப்துல்லாஹ் ஆத்தம் கிறிஸ்தவர்களின் தரப்பிலிருந்து வாதியாக இருந்தார் – ஹுஸுர்.) இந்த விவாதத்தில் கலந்து கொள்ள ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் சென்ற இடத்தில் அவர்கள் விருந்தாளியாகத்தான் இருந்தார்கள். ஜங்கே முகத்தஸ் விவாதத்தில் பல விருந்தாளிகளும் ஒன்றுகூடி இருந்தார்கள். ஒரு சமயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்காக உணவு உண்ணும் சமயத்தில் அவர்களுக்கான உணவை வைக்க அவர்கள் மறந்து விட்டார்கள். வீட்டில் உள்ளவர்கள் இவ்வாறு உணவு வைக்க மறந்து விட்டார்கள். எனது மனைவியிடம் இத்தகைய விஷயங்களை கவனமாகப் பார்க்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கூறியிருந்தேன். அதிகமான பணிகளில் ஈடுபட்டதன் காரணமாக எனது மனைவியும் இதனை கவனிக்க மறந்து விட்டார்கள். எதுவரையென்றால் இரவில் பெரும் பகுதி அவர்கள் சாப்பிடாத நிலையிலேயே கழிந்து விட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் வெகு நேரமாக காத்திருந்து விட்டு இறுதியில் உணவு தொடர்பாக கேட்டபோது எங்கள் எல்லாருக்கும் கவலை ஏற்பட்டது. பஸாரிலுள்ள கடைகளும் மூடப்பட்டிருந்தன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களிடம் நிலைமைகள் பற்றி விளக்கிக் கூறப்பட்டது. இதைக் கேட்டதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இந்த அளவு செயற்கையான பரிமாற்றத்துடனும் பீதியுடனும் நடந்து கொள்ள வேண்டிய தேவை என்ன இருக்கின்றது? உணவு உண்ணும் மேசையில் ஏதாவது மிஞ்சி இருக்கிறதா என்று பாருங்கள். அதுவே எனக்கு போதுமானது என்று கூறினார்கள். அங்கு சென்று பார்த்தபோது மேசையில் ரொட்டியின் சில துண்டுகளே இருந்தன. அதை கண்டதும் இதுவே எனக்குப் போதும் என்று கூறி அந்த ரொட்டியின் ஒன்றிரண்டு துண்டுகளை மட்டும் அவர்கள் சாப்பிட்டு விட்டு அமைதியாக இருந்தார்கள். வெளிப்படையாகப் பார்க்கும் போது இந்த சம்பவம் ஒரு சாதாரண சம்பவமாக உங்களுக்கு தெரியும். ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் எளிமை செயற்கையற்ற நிலை ஆகியவற்றின் அற்புதங்கள் நிறைந்த நல்லொழுக்கம் இதில் தெரிகின்றது.

சாப்பிடுவதற்கு அந்த சமயத்தில் புதிய ஏற்பாடுகள் செய்திருக்கலாம். இதில் எல்லாருக்கும் நிறைவான மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். மற்றவர்களுக்காக முழு இரவும் அமர்ந்து சமைத்தாலும் அது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இதனை விரும்பவில்லை. உணவிற்கான நேரம் கழிந்த பிறகு மற்ற நேரத்தில் பிறருக்கு துன்பம் கொடுக்க அவர்களுக்கு விருப்பம்

இல்லை. சிறப்பான உணவு தனக்கு கிடைக்கவில்லையே என்று நினைத்து அதற்காக அவர்கள் வருந்தவில்லை. இந்த கவனமின்மை தொடர்பாக எவரிடமும் எந்த கேள்வியையும் அவர்கள் கேட்கவில்லை. மாறாக திறந்த உள்ளத்துடன் மற்றவர்களது அச்சத்தை அவர்கள் அகற்றினார்கள். மறதியின் காரணமாகவோ அவசரமான நிலைமையின் காரணமாகவோ எவரது விருந்தோம்பலிலாவது ஏதாவது குறை இருந்தாலும் அதற்காக கோபப்படுவதற்கு பகரமாக நாம் இங்கு வந்ததன் நோக்கம் என்ன என்பதை கண்முன் நிறுத்தி செயல்பட வேண்டும். நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்து வந்த பிறகும் நாம் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நோக்கத்தை நிறைவேற்றவில்லை என்றால், உங்களது ஆன்மீக நல்லொழுக்க நிலைகளை சிறப்பான ஆக்குவதன் பக்கம் கவனம் செலுத்தவில்லையென்றால், இங்கு மாநாட்டிற்காக நீங்கள் வந்த நோக்கத்தை உங்களால் நிறைவேற்ற முடியாது. கடந்த சுற்றுப் பயணத்தின் போது நாம் ஆப்பிரிக்காவில் உள்ள பெனினிலிருந்து வந்த மக்களுக்கு ஐவரிகோஸ்டிலிருந்து வந்த சிலருக்கு சில காரணங்களால் உணவு கொடுக்க முடியாமல் போனது. ஆனால் இதற்காக அவர்களிடம் நாம் மன்னிப்புக் கேட்ட போது நாங்கள் எந்த நோக்கத்திற்காக இங்கு வந்திருக்கின்றோமோ அந்த எங்களது நோக்கம் நிறைவேறி விட்டது. காலத்தின் கலீஃபா இருக்கும் நிலையில் நடைபெற்ற மாநாட்டில் நாங்கள் கலந்து கொண்டதே எங்களுக்கு போதுமானது என்று அவர்கள் கூறினார்கள். இவ்வாறு ஆப்பிரிக்காவில் புதிதாக ஜமாஅத்தில் இணைந்தவர்கள் தங்களது ஈமானில் முன்னேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

பிறகு சின்ன சின்ன விஷயங்களில் பலமுறை பெண்கள் தரப்பிலிருந்து முறையீடுகள் செய்யப்படுகின்றது. ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் நினைவில் வைக்க வேண்டியது என்னவென்றால், விருந்தோம்பல் செய்பவர்களுக்கு சில பொறுப்புகளும் கடமைகளும் இருக்கின்றது என்றால் அதைப் போன்றே விருந்தினர்களுக்கும் சில பொறுப்புகள் உள்ளன. கடமைகள் உள்ளன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விருந்தாளிக்கு விருந்தோம்பல் செய்பவர் மீதுள்ள உரிமையை 3 நாட்களுக்கு மட்டுமே தந்து விட்டு அதற்குப் பிறகு அதை முடித்து விட்டார்கள். மூன்று நாட்களுக்குப் பிறகு விருந்தோம்பல் செய்பவரது நன்மையின் விளைவாகவே விருந்தோம்பல் தொடர்கிறது. ஒரு அஹ்மதி விருந்தாளி ஆண்டு மாநாட்டில் விருந்தாளியாக வரும் போது அல்லாஹ்வின் உரிமைகளை நிறைவேற்றுவதற்குரிய வழிமுறைகளைக் கற்றுக் கொள்ள வேண்டும். அவனது அடியானின் உரிமைகளை நிறைவேற்றுவதையும் கற்றுக் கொள்ள வேண்டும். பிறரது உரிமைகளை நிறைவேற்றும் எண்ணம் முதலிலேயே அவருக்கு இருந்தால் அது மாநாட்டின் அருள்களை மேலும் விரிவடையச் செய்யக் கூடியதாக இருக்கும். இதனை விடவும் அதிகமாக கூட்டாக செய்யப்படும் துஆக்களிலிருந்து அவர் தனது பங்கை பெறுவதுடன் முன்பை விட அதிகமாக அல்லாஹ்வின் அருள்களை ஒன்றுசேர்ப்பவராக அவர் ஆகி விடுவார்.

ஜமாஅத்தின் முன்னேற்றம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வாக்குறுதி அளித்துள்ள இறைவன் அவர்கள் செய்துள்ள துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற உத்திரவாதத்தையும் நமக்கு வழங்கியுள்ளான். அவர்களது இந்த துஆக்களுக்கு பின்னால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராக திகழ்ந்தவரை ஏற்றுக் கொண்டு அவரது ஜமாஅத்தில் இணைந்தவர்களுக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்துள்ள துஆக்கள் தான் இன்று நமக்கு நற்பலன்களை தந்து கொண்டிருக்கின்றது. இந்த துஆக்களிலிருந்து நாம் பயனடைவது இப்போது நமது நற்செயல்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 25.07.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**